செ. வெ. எண்:115 நாள் : 24.08.2016

பெருநகர சென்னை மாநகராட்சி

# வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் !!

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அரசுத்துறை/நிறுவனங்கள், சேவைத்துறைகளை ஒருங்கிணைத்து, மழைக்காலங்களில் முன்னெச்சரிக்கையாக பணியாற்றி வருகிறது.

இதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை மாநகரில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இன்று (24.08.2016) ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் தலைமையில் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் 38 அரசுத்துறைகள்/நிறுவனங்கள், சேவைத்துறைகள் ஆகியவற்றின் அலுவலர்களுடனான கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அதிக மழைநீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து தேவையான இடங்களில் அதிக குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டுகள் இருப்பு வைத்திடவும், மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வரும் இடங்களில், 15 நாட்களுக்குள் பணிகள் முடிக்கப்பட்டு, தண்ணீர் தடையில்லாமல் செல்கின்ற வகையில் இணைப்புகள் ஏற்படுத்திடவும், மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வரும் இடங்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்திடவும், மழைக்காலங்களில் பல்வேறு விதமான தொற்றுநோய்களால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அவைகளிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்திடவும், சாலைகளில் விழும் மரங்களை போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் உடனுக்குடன் அகற்ற வாகனங்கள் மற்றும் மரஅறுவை இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், மழை வெள்ளம் சூழும் பகுதிகளை கண்டறிந்து அப்பகுதி மக்களை பாதுகாப்பாக தங்க வைத்திட இடங்களை தயார் செய்யவும், உணவு தயாரிப்பு மையங்களை சுத்தப்படுத்தி, எரிபொருள், பாத்திரங்கள் போன்ற உபகரணங்களுடன் சமையல் செய்வதற்கு தயார் நிலையில் வைத்திருக்கவும், அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிடவும், கட்டுப்பாட்டு அறையில் உள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1913 மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், கட்டுப்பாட்டு அறையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சார வாரியம், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் இடம்பெறவும்,

பெருநகர சென்னை மாநகராட்சியின் வசமுள்ள 1096 வாக்கி டாக்கிகள் மூலம் தகவல் தொடர்பினை பரிமாறிக் கொள்ளவும், தெரு மின்விளக்குக் கம்பங்களில் உரிய வடிவமைப்புகளுடன் கேபிள் ஒயர்களை பொருத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டது.

சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் உள்ள 219 நீரேற்று நிலையங்களும் இயங்கும் வகையில் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். நிவாரண மையங்களுக்கு தேவையான தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டும். குடிநீரில் கழிவு நீர் கலக்காமல் கவனம் செலுத்திடல் வேண்டும். குளோரின் அளவு கண்காணிக்கப்பட வேண்டும். பொதுமக்களுக்கு காய்ச்சிய குடிநீரை பருகிட விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். கடந்த ஆண்டு தண்ணீர் தேங்கிய இடங்களில் இந்த ஆண்டு தண்ணீர் தேங்கா வண்ணம் கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். பெரிய அளவிலான சாலைப்பணிகளை நிறுத்தி வைத்திடவும், புதிய பணிகள் அனுமதியின்றி துவங்கப்படக்கூடாது என்றும், பாதாள சாக்கடை மூடிகளை சீர்செய்திட வேண்டும். நடைபெற்று வரும் பணிகளை பருவமழைக்கு முன்னர் விரைந்து முடித்திட வேண்டும். தேவையான இடங்களில் அறிவிப்பு பலகைகள் வைத்திட வேண்டும்.

சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம் தினமும் காலை, மாலை நேரங்களில் மழையளவினை தெரிவித்து உடனுக்குடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 24/7 மணி நேர வானிலை முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் மற்றும் உடனுக்குடனான புயல் எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.

பொது சுகாதாரத் துறை / மருத்துவத் துறை மூலம் போதுமான தகுந்த நோய் தடுப்பு மருந்துகளை இருப்பு வைத்திட வேண்டும். ஆம்புலன்ஸ் மற்றும் காலரா எதிர்ப்பு மருந்துகளை முன் கூட்டியே தயார் நிலையில் வைத்தல் வேண்டும்.

முன்னாள் இராணுவ வீரர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ரெட் கிராஸ் சொசைட்டி மூலம் வெள்ளம் பாதிக்கும் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பணியாளர்கள் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். ப்ளூ கிராஸ் மூலம் தேவையான பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். இந்தியன் ஏர்லைன்ஸ் மூலம் தேவைப்படும் இடங்களில் உணவுப் பொட்டலங்களை வழங்க தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

ஆவின் நிறுவனம் மூலம் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு பால் பொருட்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாக்கெட்டுகள் வழங்க தயார் நிலையில் இருக்க வேண்டும். தமிழ்நாடு மீன்வளத் துறை மூலமாக தகுதி வாய்ந்த நீச்சல் வீரர்கள், படகுகள், ஃபைபர் படகுகள் மற்றும் கட்டுமரங்களை வைத்திருப்பவர்களின் பெயர்கள் மற்றும் விவரங்களை தயார் நிலையில் வைத்திருந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினர்களுக்கு தேவைப்படும்பொழுது படகுகளை வழங்க வேண்டும்.

மாடர்ன் பிரட் நிறுவனம் மூலமாக தேவையான எண்ணிக்கையிலான ரொட்டிகள் தேவைப்படும் மண்டலங்களுக்கு உடனுக்குடன் வழங்குவதற்கு தயார் நிலையில் இருத்தல் வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியம்

மழைக்காலங்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சீர்செய்திட 24 மணிநேரமும் இயங்கும் குழுக்களை ஏற்படுத்தி பணியாற்றிட வேண்டும். தாழ்வான பகுதிகளில் உள்ள மின்ஒயர்களை உயரமான இடத்தில் அமைத்திட வேண்டும்.

செயின்ட் தாமஸ் மலை இராணுவ படைத்தளபதி பாதிப்பிற்கு உள்ளான பகுதிகளுக்கு சென்று விரைந்து செயல்பட தயார் நிலையில் இருக்க வேண்டும். சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள பொதுமக்களை மாற்றிடங்களுக்கு கொண்டு செல்லவும், உணவு பாக்கெட்டுகளை எடுத்து செல்லவும் பேருந்துகளை தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் உதவித் தொகை 24 மணி நேரத்திற்குள் வழங்கிட வேண்டும். காவல் துறையினர் நிவாரண பணிகளின் போது உதவி புரிதல், முக்கியமான இடங்கள் மற்றும் உரிய அலுவலர்களின் அறைகளில் கம்பியில்லா தகவல் தொடர்பு ஏற்படுத்த வேண்டும். மழைக்காலத்தில் தண்ணீர் தேக்கமடையும் சாலைகளின் விவரங்களை போக்குவரத்து காவல் துறையினர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத்துறை மூலம் அனைத்து மழைநீர் வடிகால் கால்வாய்களை தூர்வாரி, நீர் செல்லும் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள், முட்புதர்களை அகற்றிடவும், தேவையான அளவு மணல் மூட்டைகள், சிமெண்ட் கலவை தடுப்புகள் தயார் நிலையில் வைத்திட வேண்டும். பாலத்தின் அடியில் உள்ள மண்திட்டுகளை அகற்றி மழைநீர் செல்ல வழிவகை செய்திட வேண்டும். கால்வாய் புழல் ஏரிகளிலிருந்து அடையாறு, கூவம் நதி மற்றும் புழல் கால்வாய்களிலிருந்து திறந்துவிடும் நீரின் அளவை உடனுக்குடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தெரிவித்திட வேண்டும் என அனைத்துத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், துணை ஆணையர் (பணிகள்) திரு. கே.எஸ். கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப. அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி.நாயர், இ.ஆ.ப. அவர்கள், பொதுப்பணித்துறை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுவாரியம், சென்னை ஆட்சியர் அலுவலகம், பொதுசுகாதாரத்துறை / மருத்துவத்துறை, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்/வீட்டு வசதி வாரியம், சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம், காவல்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு மின்சாரவாரியம், சென்னை தொலைபேசி, சென்னை மாநகர போக்குவரத்துக்கழகம், காவல்துறை, தமிழ்நாடு தீயணைப்புத்துறை, ஆவின், நெடுஞ்சாலைத்துறை, இராணுவத்துறை, கடலோரகாவல் படை, தகவல் மற்றும் மக்கள் தொடர்புத்துறை, வானொலி நிலையம், பேரிடர் மேலாண்மை, ரெட் கிராஸ், ப்ளூ கிராஸ், நுண்கண்ணாடி இழைவடம் நிறுவனங்கள், மாடர்ன் பிரட் நிறுவனம், முன்னாள் இராணுவ வீரர்கள் நலத்துறை, சென்னை பெருநகர இரயில் நிறுவனம், தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை போன்ற துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**